
உ
ஓம் சாயிராம்

# சாயி ரசம்



உரும்பிராய்
பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா
நிலையத்தினரின்

## 10ஆவது ஆண்டு நிறைவு மலர்

06-05-1995

உ

ஓம்சாயிராம்

# சாயிரசம்



உரும்பிராய்

பகவான் ஸ்ரீ சத்யசாயி நிலையத்தினரின்

## 10ஆவது ஆண்டு நிறைவு

வெளியீடு :

**06 - 05 - 1995**

# சமர்ப்பணம்

இந்நிலையத்தின் ஸ்தாபகரும்
நிலையத்தினை அமைக்க இடத்தைத்
தந்துதவியவரும்
தலைவருமான
*அமரர் ஸ்ரீ நா. பொன்னுத்துரை*
அவர்களிற்கு
இச் சிறு மலர்
சமர்ப்பணமாகிறது.

# வெளியீட்டுரை

ஓம் சாயிராம்

**மண்ணினில் மனிதனாகி மக்களைக் காப்பதற்கு**
**இன்னருள் பார்வை நல்கி எம்மையும் ஆண்டு கொண்ட**
**பண்ணிய பாவம் தீர்க்க பர்த்தி புரியில் வாழும்**
**புண்ணியன் சாயியே உன்பொற்பதம் சரணமையா.**

மக்கள் சேவையே மகேசன் சேவை என மண்ணினில் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் தெய்வீக குருவோடு வாழும் நாம் அனைவரும் பாக்கியசாலிகள். இப்படியான ஒரு திரு அவதாரத்தை இச்சிறு இரசத்தினுள் அடக்க நினைப்பது சமுத்திரத்தைச் சாடியில் அடக்க நினைப்பதற்குச் சமம். இச் சாயிரசம் மலர்வதும் சாயீசன் அருளே.

ஆனாலும் தொடங்கு முடித்து வைக்கிறேன் என்பவர் எங் குருநாதர். தொடங்கினோம் முடித்தோமா? பதில் வாசகர்களாகிய நீங்களே சொல்ல வேண்டும். இதிலுள்ள சாயி சரிதத்தை பாலவிகாஷ் பிள்ளைகளிற்கு, இசைச் சொற்பொழிவாகவோ, வில்லிசையாகவோ, பழக்க வாய்ப்பாக பாடல்களை யாத்து இணைத்துள்ளோம். பக்தர்கள் பயன்பெறுவார்களாக.

குற்றங்களைந்து குணங்கொண்டு கற்றவர் உலகு மற்றவர்களும் குருநாதனைத் தெரிந்து சாயிமேன்மை தரைமீது விளங்க ஒத்துழைப்புத்தர உங்களை யாசித்து எங்குருநாதரின் பாதங்களைப் பூசித்து நிற்கிறோம். ஆசியுரைகள் தந்த அனைவர்க்கும் ஒத்துழைப்பு நல்கிய ஒவ்வொருவருக்கும் எம் இதயங் கனிந்த நன்றிகள்.

ஜெய் சாயிராம்

தேவாலய வீதி,
உரும்பிராய்.

**உரும்பிராய் சத்ய சாயி**
**சேவா நிலையத்தினர்**

# பிரார்த்தனைச் செய்தி

ஓம்சாய் ராம்

## ஸ்ரீ சத்ய சாய் நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர்

### பிராந்தியம் — 15

### இலங்கை

உரும்பிராய் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம் தனது பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. நிலையத்தின் ஸ்தாபகர் அமரர் நா. பொன்னுத்துரை தொடக்கம் பல நல்ல பக்தர்கள் நிலையத்தை நடாத்தி வந்திருக்கிறார்கள். அவர்களின் பணிகளைப் போற்றி பகவானின் ஆசிகள் அவர்களுக்குக் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

பகவான் தமது தெய்வீகப் பணியை வருடா வருடம் வேகமாக்கி வருகிறார். அதற்கேற்ப நாமும் எமது பணிகளை மறு பரிசீலனை செய்து வேண்டிய மாற்றங்களைச் செய்தே தீர வேண்டும். தனியே பஜனை நிலையங்களாக இயங்கிய காலங்கள் மலையேறி விட்டன. சேவைக்கு முக்கியத்துவங் கொடுக்க வேண்டும். இளந்தலை முறையினரை உருவாக்க மனித மேம்பாட்டுக் கல்வி இன்றியமையாதது. இதற்கு பெற்றோர்கள் தம் பங்கை உணர வேண்டும். அநுபவ ரீதியாக உணர்ந்த ஒருவர் பகவானின் போதனைகளை வாராந்த பஜனை முடிவில் பக்தர் தர்களுக்கு விளக்க வேண்டும். அவதாரத்தின் சமகாலத்தில் வாழும் பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்கிறது. அதனை நன்கு பயன்படுத்த வேண்டியது எமது கடமை.

அன்பே சாயியின் மூல மந்திரம். அது எங்கும் பரவும் புனித இடமாக எமது நிலையங்கள் அமைய வேண்டும். பார்வையாளர்கள் அனைவரையும் பகவானின் பணியின் பங்காளிகளாக அழைக்க வேண்டும். எல்லோருக்கும் சேவைப் பணிகளில் சந்தர்ப்பங்கொடுக்க வேண்டும்.

பகவானின் திவ்ய கருணையினால் உரும்பிராய் சத்ய சாயி நிலையம் வருங்காலத்தில் மேலும் பல பணிகளில் சிறப்புற்று பெரு விருட்சமாக வளர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**செ. சிவஞானம்**
மத்திய இணைப்பாளர் இலங்கை

# ஆசிச் செய்தி

## ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின் பிராந்திய இணைப்புக் குழு

### இலங்கை

உரும்பிராய் ஸ்ரீ சத்ய சாயி நிலையம் அதன் 10ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் இச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நிலையத்தின் ஆரம்பகாலத்தில் காலஞ்சென்ற N. பொன்னுத்துரை அவர்களின் தலைமையில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றன. அமரர் செ. ஞானசேகரம் அவர்கள் தலைமையில் இரண்டு பாலவிகாஷ் குருமார் பயிற்சி முகாம்கள் நடைபெற்றன. யாழ். மாவட்டத்திலுள்ள எல்லா நிலையங்களிலிருந்தும் குருமார் பங்குபற்றியது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. இப்பகுதி மக்களின் ஆன்ம விடுதலைக்கு இந்நிலையம் அளப்பரிய சேவை செய்துள்ளது.

சமீப கால நாட்டு நிலைமை காரணமாக பல உறுப்பினர்கள் இடம்பெயர்ந்துள்ளமையால் இந்நிலைய செயற்பாடுகளில் சிறு தொய்வு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. நிலைய உறுப்பினர்கள் அனைவரும் தீவிர முயற்சியெடுத்து, நிலையத்தின் ஆன்மீக, கல்வி, சேவை ஆகிய மூன்று பிரிவுகளும் திறமையாக இயங்க வைக்க வேண்டும்.

இதனை ஒரு சவாலாக எடுத்து, பகவானின் போதனைகளை நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும். மீண்டும் உரும்பிராய் நிலையம் வடபிராந்தியத்தில் ஒரு தலைசிறந்த நிலையமாக வளர பகவானின் நல்லாசிகளை வேண்டி அமைகிறேன்.

ஜெய் சாயிராம்

**S. R. சரவணபவன்**
ஆன்மீக இணைப்பாளர்
வட பிராந்திய சத்ய சாயி
நிலையங்களின்
இணைப்புக் குழு

பிள்ளையார் கோவிலடி,
தாவடி.
18-04-1995

# வாழ்த்துச் செய்தி

## இலங்கை ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்களின்

## வட வலயம்

### 80, குறுக்குத் தெரு, நல்லூர்

### யாழ்ப்பாணம்

உரும்பிராய் சத்ய சாயி நிலையம் யாழ். சமிதியுடன் ஆரம்பத்தில் இணைந்து இயங்கி வந்தது. பின் அதன் தலைவர் அமரர் திரு. நா. பொன்னுத்துரை அவர்களின் பெரு முயற்சியினால் இது ஓர் சமிதியாக இயங்கி வருகிறது. அக் காலங்களில் ஆன்மீகம், கல்வி, சேவை என்பவற்றில் சிறப்புற்றதுடன் பாலவிகாஷ் வகுப்புகளும் நேர்த்தியாக நிகழ்ந்தன.

திரு. நா. பொன்னுத்துரை அவர்கள் அமரராகியதும் இயக்கத்தில் சற்று மந்த நிலை ஏற்பட்டது. திரு. மா. துரைராசா அவர்களது தலைமையில் பின் முன்னேறிய சமிதி அவரது சுகவீனத்தினால் தளர்வு கண்டது. அதன்பின் திரு. க. ஆனந்தராசா அவர்களது தலைமையில் வளர்ச்சி கண்டது. அவர் தமது வேலைப் பழுகாரணமாக விலகியதும் மீண்டும் 1994இல் திரு. மா. துரைராசா தலைமை ஏற்றார். சிறிது முன்னேறிய பொழுதிலும் பாலவிகாஷ் வகுப்புக்கள் தடைப்பட்டுள்ளன.

ஒரு சாயி நிலையத்திற்கு பாலவிகாஷ் மிக முக்கியம். வருங் காலத்தில் பாலவிகாஷ் மாணவர்களே நிலையங்களை நடாத்தப் போகிறார்கள். 1995இல் இந்நிலையம் முன் மாதிரியாக வளர வேண்டும் என்று பகவானைப் பிரார்த்திக்கின்றேன். இத்துடன் இயங்கும் ஊரெழு மண்டலி பல வழிகளிலும் முன்னேறுவதை அவதானிக்க முடிகிறது.

எனவே இந்நிலையமும் இவ்வாண்டு ஆத்மீகம், கல்வி, சேவை ஆகிய பணிகளில் முன்னேற வேண்டும் என்றும் இதன் பத்தாம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற வேண்டும் என்றும் பகவானை வேண்டி வாழ்த்துகிறேன்.

**ச. விஜயரட்ணம்**
தலைவர்
(வட வலய இ. கு.)

உ

# எங்கள் பத்தாண்டு வளர்ச்சிப்பார்வை

ஈழத்திரு நாட்டின் சிகரமென விளங்குவது யாழ்ப்பாணம். தமிழொடு சைவம் தரணியில் நிலைபெற தகைபெற வாழ்ந்த பெரியார்கள் பலரைக்கொண்ட திருநகர் யாழ்நகர். குருவழிபாட்டிற் சிறந்துவிளங்குவபர்கள் இங்குள்ளமக்கள். இவர்களின் தவப் பயனோ என்னவோ தவத்திருயோகர்சுவாமிகள் அவதரித்த புண்ணிய பூமி இது. இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த யாழ்ப்பாணத்தை அணி செய்கின்ற ஊர்களில் உரும்பிராயும் ஒன்று. யாழ்நகரில் இருந்து 5கி. மீ. வடக்கே பலாலி வீதியில் அமைந்துள்ள இவ்வூர் பலவளங்களையும் பல சிறப்புகளையும் கொண்டது.

பொன் விளையும் நல்ல மண்வளமும் எப்பயிரும் சிறப்பாக வளர்ந்து உச்சபயன் கொடுக்கவல்ல நீர்வளமும் கொண்டு விளங்குவதுடன் இவ்வூரிற்கு சகலசெழிப்பும் கொடுத்துவிளங்குவனவாக ஆலயங்களும் வித்தியாலயங்களும் அமைந்துள்ளன. இத்தகு சிறப்பு வாய்ந்த இத்திருவூரிற்கு மேலும் சிறப்பினைச் சேர்க்கத் தக்கவகையில் ஸ்ரீ சத்தியசாயி நிலையம் ஒன்றினை அமைத்த பெருமை அமரர் ஸ்ரீ நா. பொன்னுத்துரை ஐயா ( நிலஅளவையாளர் ) அவர்களைச் சாரும்.

இச்சாயி நிலையத்தை தாபித்தவரலாறு சுவைமிக்கது. இவ்வூரில் வசிக்கின்ற சில குடும்பத்தினர் தீவிரசாயி அடியார்களாக இருந்தார்கள். இவர்கள் ஒன்று கூடி தங்கள் தங்கள் இல்லங்களிலே விசேட வழிபாட்டிற்குரிய தினங்களில் கூடிபஜனை செய்து வந்தார்கள். இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் மேற்படி சாயி சகோதரர்கள் அனைவரும் மிகவும் பத்திபூர்வமாக சுருதிபேதம் தவறாது பஜனைப்பாடல்களைப்பாடும் திறன் மிக்கவர்கள். அமரர் பொன்னுத்துரை ஐயா குடும்பத்தினர்களும் சாயி வழிபாட்டில் ஊறியவர்கள். இவர்கள் எல்லோரும் கூடினார்கள் எங்கள் ஊரில் ஒரு சாயி வழிபாட்டு நிலையத்தை அமைத்தால் பகவானுக்கு சிறப்பாக இருக்குமே என்று நிலையத்திற்குரிய இடம் எங்கு அமைக்கலாம் என ஏங்கியவேளை தானாகவே முன்வந்து தற்பொழுது சமிதிநடைபெற்றுக் கொண்டிருக்கும் இம் மண்டபத்தைத் தந்துதவினார்கள்.

ஆம் அன்று 06 - 05 - 85 பகவானை இப்பூவுலகிற்கு ஈய்ந்த அன்னை ஈஸ்வரம்மாவை நினைவுகூரும் ஈஸ்வரம்மாதினத்தன்று எமது சத்யசாயி சமிதிவைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இப்பெருவிழாவிற்கு அகில இலங்கை சத்யசாயி நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ S. சிவஞானம் ஐயா அவர்கள், அமரர் சபாரத்தினம் (யாழ்சமித்தி தலைவர்) அவர்கள் சாயி சகோதரர் திரு. முத்துலிங்கம் அவர்கள் தற்பொழுது வடபிராத்திய இணைப்புக்குழுத் தலைவர் திரு. விஜயரத்தினம் அவர்கள் திரு. கோவிந்தசாமி அவர்கள் ஆகியோரார் சமூகமளித்துச் சிறப்புரை யாற்றினார்கள்.

14-01-86 அன்று கூடிய மகரசங்கிராந்தியன்று நடைபெற்ற விசேட பஜனை முடிவில் அமரர் நா. பொன்னுத்துரை அவர்கள் தலைவராகவும் திரு மா. துரைராசா அவர்கள் செயலாளராகவும் திரு. க. துரைராசா அவர்கள் பொருளாளர் ஆகவும் தெரிவு செய்யப்பட்ட முதல் நிர்வாகக் குழு தமது சாயிபணியை ஆரம் பித்தது. அவ்வேளை திரு. பொன்னுத்துரை குடும்பம் திருமதி மகேந்திரன் குடும்பம், டாக்டர் திரு. இராசேந்திரம் குடும்பம், திருமதி யோகரத்தினம் குடும்பம், திரு. க. துரைராசா குடும்பம், அமரர் திருமதி யோகரத்தினம் குடும்பம், திரு. க. துரைராசா குடும்பம், திரு. மா. துரைராசா, திருமதி பூமணி நடராசா, திரு. ஞானசேகரம் குடும்பம், திரு. A. நடராசா குடும்பம், திருமதி புனிதம் விஜயரத்தினம், அமரர் செல்வி க. சண்முகம் (பவுளி), திருமதி வி. கைலேஸ்வரன் ஆகியோர்கள். ஆரம்பகால தீவிர சாயிதொண்டர்களாக உறுப்பினர்களாக இயங்கினார்கள்.

ஆரம்பத்தில் மண்டலியாக ஆரம்பித்த இந் நிலையம் அதன் செயற்பாடுகளின் வளர்ச்சி காரணமாக விரைவில் ஓர் சமிதியாக மாறியது. அமரர் திரு. பொன்னுத்துரை அவர்களின் அயரா முயற்சியினாலும் சாயிஅடியார்களின் ஒத்துழைப்பினாலும் சேவா தாள், மகிளவிபாக், பாலவிகாஸ், ஆன்மிக சேவை தரித்திர நாராயணசேவை, ஆதரவற்றவர்களுக்கானசேவை, இல்ல பஜனை என்பவற்றை வெகுசிறப்பாக நடாத்தி மக்களைக் கவர்ந்து பலசாயி சகோதரர்களை உருவாக்கும் வண்ணம் வளர்ந்தது.

பகவானின் போதனைகளில் ஒன்று வளரும் சமுதாயம் ஒழுக்க சீலர்களாகவும், ஆன்மீக நெறியில் வாழ்பவர்களாகவும் இருந்தால் நாட்டில் சமாதானம் சாந்தி, அமைதி நிலவும் என்பது. இவற்றிற்குரிய அடிப்படையான கல்வியை சின்னஞ் சிறுவர்களுக்கு வழங்க என ஆரம்பிக்கப்பட்டதே பாலவிகாஸ் கல்வித்திட்டம் இத்திட்டத்தினைச் சிறப்புற நிறைவேற்ற வேண்டு

மானால் இதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றகுருமார்கள் தேவை இப்படியானகுருமார்களைப் பயிற்றுவித்து சமிதிகள் தோறும் பரலவிகாஸ் கல்வித்திட்டத்தை வளர்ப்பதற்காக எமது சமிதியில் ஓர் குழு பயிற்சி கற்கைநெறி 19-4-85, 20-4, 4-5, 10-6-86 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் வந்து கலந்து கொண்ட சாயிஅடியார்களுக்கு நடத்தப்பட்டது. இவர்களுக்கான கற்கைநெறிகளை அமரர் ஸ்ரீஞானசேகரம் அவர்கள் தலைமையிலானகுழு சிறப்பாக நடாத்தி பரீட்சைகள் வைத்து அதில் சித்திபெற்றவர்களுக்கும், பங்குபற்றியவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கினர்.

இப்பரீட்சையில் எமது சமிதியைச் சேர்ந்த திருமதிகளான, மீனாம்பிகை தவரத்தினம், வேணியோகேஸ்வரன் ச. சண்முகரத்தினம் ஆகியவர்களுடன் செல்வி நளினி சபாபதிப்பிள்ளையும் சித்தியெய்தினர். திருமதி மீ. தவரத்தினம் சிறப்பாக பரலவிகாஸ் வகுப்புகளை நடாத்தி உதவினார். வியாழன், ஞாயிறு ஆகிய தினங்களில் வாராந்த பஜனைகளும் கல்விவட்டம், சத்சங்கம், நாராயணசேவை சிரமதானம் என்பனவும் ஒழுங்காக நடைபெற்றன. ஒவ்வொரு மாதபோயா தினங்களிலும் திருமதி திரவியம் மகேந்திரன் அவர்களது இல்லத்தில் விசேட பஜனை இன்றுவரை நடைபெற்று வருகின்றது. அத்துடன் பல்வேறு சமிதிகளின் அழைப்புகளை ஏற்று அவற்றிலும், அவ்வப்போது சாயிஅடியார்களின் வீடுகளில் நடைபெறும் விசேட பஜனைகளிலும் எமது சாயி அன்பர்கள் கலந்து சிறப்பித்துவருகின்றனர்.

30-11-1986இல் நடைபெற்ற பகவானின் அவதாரவிழா சிறப்பு ஏற்பாட்டில் எமது சேவாதள தொண்டர்களான. M. சுதாகரன், R. இராஜ்குமார், G. சத்தியன், J. பகீரதன், Y. சிவயோகன், S. பவான் ஆகியோர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன இதன்பயனாக யாழ். சமிதிக்குழுத்தலைவரின் பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1986இல் கல்முனை அகதிகளுக்காக எம்மால் நிதிசேகரித்து அனுப்பப்பட்டது.

1987இல் ஏற்பட்ட நாட்டின் சீரற்ற அரசியல் நிலை காரணமாக எமது சமிதியைச் சேர்ந்த பலர் அயல் நாடுகளிற்கு சென்றனர். 1988இல் எமது சமிதியின் ஸ்த்தாபகரும் தலைவருமான திரு. நா. பொன்னுத்துரை அவர்கள் அமரத்துவம் அடைந்தார். அவரது மறைவைத் தொடர்ந்து திரு. மா. துரைராசா தலைவராகவும் திரு. க. ஆனந்தராசா ஆசிரியர் செயலராகவும் திரு. K. துரைராசா பொருளாளராகவும் பதவி ஏற்று மிகச் சிறப்பாக

பணி தொடங்கியது. 1989இல் ஞானசம்பந்தர் சைவ அனாதை இல்லத்தை சேர்ந்த பிள்ளைகளிற்கு பாலவிகாஸ் வகுப்புகளும் அங்கு மாதத்தில் ஒருதரம் பஜனையும் சிறப்பாகச் செய்யப்பட்டு வந்தது. நாராயண சேவையும் செய்யப்பட்டது. அத்துடன் விசேட பஜனைத் தினங்களில் இம் மாணவர்கள் மூலம் பல கலைநிகழ்ச்சிகளும் தயாரித்து வழங்கப்பட்டன. இவர்களுக்கான சீருடையும் வழங்கப்பட்டது.

1989இல் பகவானின் அவதாரதினத்தன்று புற்றுநோயாளர் விடுதிக்கு நிதியுதவியும், செல்வி ஜெயகௌரி என்பவருக்கான செவிப்புலன் கருவி கொள்வனவு நிதியும் வழங்கப்பட்டன. 1991இல் மிக விசேட நிகழ்வாக பகவானின் பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இன்றுவரை விசேட வழிபாடுகள் செய்யப் பட்டுவருகின்றன.

அத்துடன் ஒவ்வொரு மாத 1ஆம் வெள்ளிக்கிழமைகளிலும் இங்குள்ள சிவன் ஆலயத்தில் பஜனை நிகழ்வு இன்று வரை சிறப்பாக நடைபெறுகிறது.

இம் முறை பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யா/சந்திரோதய வித்தியாசாலையின் கல்விவளர்ச்சிக்கு உதவு முகமாக ரூபா 12000/- பெறுமதியான பத்து தடுப்புகளை (Screen) வழங்கி பகவானின் சேவைக்கு பங்களித்து மகிழ்கிறது அத்துடன் இதோ உங்கள் கரங்களில் தவழும் இம்மலரும் வெளிவருகிறது.

ஜெய் சாயிராம்

# அனைத்தும் அறிபவர் சாயி அன்பையே அவரிடம் யாசி

**அன்னைதாசன் திரு. க. ஆனந்தராசா ஆசிரியர்**

மக்களை மாக்களில் இருந்து பிரித்து அறிந்து அவர்களை மனித நேயத்துடன் வாழ வழி வகுப்பன சமயங்கள். இவை உலகில் பல. இப்பலவற்றிலிருந்து சில புதியனவாகவும் மிளிர்கின்றன. உலகில் மனித வாழ்வில் அமைதியை ஏற்படுத்தவென தோன்றிய மதங்கள் இன்று அவற்றைத் தழுவும் மக்களால் மதம் பிடித்து மதவாதிகள் பிரிவினை வாதிகள் எனும்பேரழிவினை நோக்கிச் செல்வது வேதனைக்குரியது.

சனாதனதர்மமாம் சைவம் போதிக்கும் அடிப்படைக் கருத்துக்கள், அன்பேசிவம், மாதாபிதா குரு தெய்வம், திருவருள் கைகூட குருவருள் இன்றியமையாதது. கன்மத்திற் கேற்ப பிறவி, தாரமுங் குருவுந் தலைவிதி என்பன. இவை வாழ்ந்து சென்றவர்களாலும், வாழ்ந்து கொண்டிருப்பவர்களாலும், வாழப் போகின்றவர்களாலும் உணரப்பட்ட உணரப்படுகின்ற, உணரப் போகின்ற உண்மைகள்.

இப் புண்ணிய பூமியிலே எத்தனையோ ரிஷிகள், முனிவர்கள், சாதுக்கள், மகான்கள் அவதாரபுருஷர்கள் அவ்வப்போது தோன்றி மக்களிற்கு வழிகாட்டி மனித வாழ்விற்கு ஒளியூட்டிச் சென்றுள்ளார்கள். அவர்களின் திவ்ய வாழ்க்கையை, திவ்ய நிலைகளை மகிமைகளை அறிந்தவர்கள் அவ்வப்போது சிலராகவே இருந்திருக்கிறார்கள் அவர்களை உள்ளபடி இவ்வுலகம் சரிவரப் புரிந்து கொண்டதா? கொண்டிருக்கிறதா? என்பது கேள்விக்குறியே. காரணம் இவ்வவதார புருஷர்கள் பார்வைக்கு சராசரி மனிதர்களாகவும் வாழ்ந்தமையே.

குருவருளின், குருவின் சிறப்பை மிகத்தெளிவாக அறுதியிட்டு உரைக்கின்ற சைவ நூல் திருவருட்பயன். இதில் இருவரிகளினாலான குறள்கள் மூலம் இறை அருளை, அமுதை, சுவை சொட்டச் சொட்ட தெளிவாக விளக்கியுள்ளார். இதன் ஆசிரியரான உமாபதி சிவாச்சாரியார் அவர்கள்.

> ''பார்வையென மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம்
> போர்வை யெனக் காணார் புவி''

ஆம்! வனத்திலேயுள்ள வேடன் ஒருவன் மானைவேட்டை யாடப் புறப்பட்டான். ஒரு மான்குட்டியை உயிருடன் பிடித்து வருகிறான. அதனை வீட்டில் வைத்து வளர்த்து தனக்கு இசைந்த தாக்குகின்றான். பின் இதனைக் கொண்டு வந்து காட்டில் விடுகிறான். நீர் நிலைக்கு அருகில் அங்கு இதனைக் கண்ட இதன் இனத்தைச் சேர்ந்த மான்கள் தம்மினத்தில் ஒன்று, அதோ! நிற்கிறதே என்று தாமும் பயமின்றிவந்து சேர்கின்றன. இது வேடனுக்கு வாய்ப்பாகின்றது. வேட்டையாடுகிறான். இதே போற்தான் பக்குவப்பட்ட ஆன்மாக்களைத் தேடி இறைவன் குருவடிவாக நாடி வருகிறான். எம்மால்தான் அவனை உணரமுடிவதில்லை. அதற்கும் காரணங்கள் இல்லாமலில்லை. இது போலிகள் பொலிகின்ற உலகம், வேடதாரிகள் விளைகின்ற நிலம். கடவுளைக் காட்டி கடவுள் எனப் பாசாங்கு காட்டி காசுபறிக்கின்ற உலகிலே உண்மை எது பொய் எது என்று பிரித்தறிவது மிகக் கடினம். நிஷம் எது வேஷம் எது என்று அறிவது வில்லங்கம். அல்லல் பட்டு அலை மோதும் உள்ளங்களுக்கு கானல் நீரே நீராகத் தோன்றும். அதனாலேதான் சைவம் நம்புகிறது தாரமுங் குருவும் தலையில் எழுத்து என்று.

ஆனால் உண்மைக்கு ஒளியுண்டு உண்மைதளம்பாது, உறங்காது. இந்த வகையில் சத்யசாயி பாபா, ஆம்! புட்டபர்த்தியில் வாழும் புண்ணியன் எட்டநின்று ஏத்துபவர்களின் உள்ளங்களையும் கிட்டவந்து காட்சி தந்து கவரும், கவலை மாற்றும் கைங்கரிய சிலன் சில அற்புத உண்மைகளை நாம் அனுபவித்தவற்றை இங்கு தருகிறேன்.

**ஸ்ரீ ஸ்ரீ சத்யசாயியின் தர்சனம்:**

கூறுமுன் ஒருதெளிவிற்காக! அனேகமாக ஓர் சாயி அடியார் இன்னொருவரைச் சந்திக்கும் பொழுது இருவரும் சுவாமியின் அற்புதங்களாக தாம் அனுபவித்தவற்றை ஒருவரை ஒருவர் விஞ்சும் வண்ணம் கதைப்பது வழக்கம. இதனைப் பார்க்கும் மூன்றாமவர் இப்படியும் நடக்குமா? என்று மூக்கில்கை வைப்பதும் பழக்கம். இவற்றில் உண்மையும் இருக்கலாம் வெறும் பீற்றலுமாக இருக்கலாம் ஆனால் ஒருகுழு அனுபவித்தவை இந்த வகைக்குள் அடக்க முடியாதவை நிதர்சனமானவை. இவை சாயியின் மீது மக்கள் நம்பிக்கை வைக்க உந்தலாகவும் அமையக் கூடியவை.

ஆம் எமது சமிதியில் ஞாயிறு, வியாழன் ஆகிய தினங்களில் பஜனை நடைபெறும். அன்று 15-11-90 வியாழன் வழமையான பஜனை வெகு ஆனந்தமாக அடியார்கள் பாடுகிறார்கள்.

எம் குருநாதரின் திவ்ய உருவத்தைத் தாங்கி 45 × 120 CM நீளமான பிரதிமைப்படம் அழகிய இருமாலைகளால் அலங்கரிக்கப் பட்ட நிலை இதனைத் தாங்கிய பீடப்பலகை 30 செ. மீ. × 180 செ. மீ. நீளமான கருமை கலந்த மண்ணிறமானது. இதன் முன்னால் பூரண கும்பம் திடீரென இப் பலகையின் வலது பக்கத்தில் தோற்றுகிறார் பகவான் அடியார்களில் சிலர் சுவாமி! சுவாமி! ! என வாய்விட்டே கதறினர் அன்று பஜனையில் இருந்த அனைவரும் அனுபவித்த காட்சி இது. இக்காட்சி சில நிமிடங்கள் நிலைத்தன.

முடிந்தது பஜனை எங்கும் இதே கதைதான். தரிசித்த அடியார் கூட்டத்திற்கோ அளவற்ற ஆனந்தம். அன்றெனப் பார்த்து அடியேன் சமூகமளிக்கவில்லை. என்னைப்போன்று இன்னும் சிலர் இருந்தோம். ஏங்கினோம். நான் சுவாமியிடம் ஐயா என்னை உனக்குப் பிடிக்கவில்லையா? நானோ ஏழை, உன்னிடம் நேரடியாக வந்து. உன்னைத் தரிசிக்கக் கூடிய வாய்ப்பு இல்லையையா! நீ வந்த வேளையில் கூட ஏனையா என்னை ஒதுக்கி வைத்தாய் இது உனக்கு நீதியா? என்று விம்மினேன். விம்மியது மட்டுமல்ல வெளிப்படையாகவே மற்றவர்களிற்கும் சொல்லி வருந்தினேன்.

அடுத்த நாள் வெள்ளி ஓர் சாயி சகோதரியின் வீட்டில் பஜனை ஏற்பாடாகியிருந்தது அங்கும் இதேகதைதான். தரிசிக்காத அடியார்களாகிய நாம் அடைந்த வேதனை ... 18 - 11 - 90 ஞாயிறு பஜனை ஓங்காரம் அட்டோத்திரம் விநாயகர் குரு சிவன் பாடல் பக்கவாத்தியங்களின் இனிமையோடு இசைந்து வருகிறது. அதேபீடத்தில் எமக்கு முன்னால் வண்ணக் கருஞ்சடைகள் கன்னங்கரேலென மின்ன காவியுடைதாங்கிய கலியுக அவதாரரின் அன்புருவமும் அழகுருவமும் தோன்றுகிறது. தன் வண்ணப் பொற்கரங்களினால் எம்மோடு சேர்ந்து தாளம்போட்டபடி பாட நாமொவ்வொருவரும் சேர்ந்து அனுபவித்தோம். முருகன் பாடலுடன் முறுவல்காட்டிய முரளிலோலர் முழுத்தரிசனந்தந்து தன் கண்ணான பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி ஏகினான்.

பகவான்கூற்று என்னைநோக்கி ஒரு அடிவை நான் நூறு அடிகள் உன்னிடம் ஓடிவருவேன் என்பது. ஆம் நூறுஅடிகள்

அல்ல அன்புள்ளங்களை அரவணைக்க ஐயன் நூறாயிரம் மைல்களும் தாண்டிவருவான் இது உண்மை. இவை எமது சமிதியின் சரித்திரம் படைத்த நாட்கள்.

**உண்மையான பக்தரின்**
**கோரிக்கைகள் சுவாமிக்குத் தெரியும் :**

சாயி பத்தர்களிடம் ஒரு கொள்கை எங்கு சென்றாலும் சாயியின் பாடல்களையே பாடவேண்டும் என்று இடம் பொருள் ஏவல் பார்க்க மாட்டார்கள். இதிலிருந்து எம்போன்ற பலர் மாறுபட்டவர்கள். இப்படியானவர்களை நோக்கும் பொழுது நான் சுவாமியிடம் வேண்டுவது. ஐயா இவர்களிற்கு அறிவூட்டி இவர்களது மாயையைப் போக்கமாட்டாயா? என்று (இதற்கும் உண்மையான வரலாறு எமது சமிதியினர் மத்தியில் உண்டு எழுத கட்டுரை நீண்டுவிடும்).

இது எம் சுவாமியின் காதில் விழுந்ததா இல்லையா நீங்களே பாருங்கள். 1994இன் மார்கழி சனாதன சாரதி இதழின் 19ஆம் பக்கத்தில் சுவாமி கூறுகிறார். பஜன் பாடும் போது ஸாயியின் நாமத்தை மட்டுமே சொல்லாதீர்கள். ஸ்வாமி பாடும் போது எப்போழுதும் தன் பெயரைச் சொல்வதில்லை ஸ்வாமி, ''ஹரி பஜன பினா சுக சாந்தி நஹி'' என்று பாடும் பொழுது நீங்கள் சாயி பஜன பினா சுக சாந்தி நஹி '' எனச் சொல்றீர்கள். நான் சொல்வதை நீங்கள் கேட்பதில்லை என இதற்கு அர்த்தமாகிறது இத்தகைய குறுகிய எண்ணங்கள் வேண்டாம். சாயி சாயி என்று நீங்கள் பாடினால் மக்கள் உங்களைக்குறுகிய நோக்கம் உடையவர்களாகக் காண்பார்கள். சுவாமி சொல்லித் தருவதெல்லாம் வேற்றுமையில் ஒற்றுமை தான். ஸ்வாமி எது சொல்லிக் கொடுத்தாலும் அது புனித மானது தான். அது உங்களுக்கு நன்மை தான் செய்யும். சுயநல நோக்கில் மட்டும் போகாதீர்கள். அதன் மூலம் என்னைவிட்டு விலகிப்போய் விடுவீர்கள் நான் என்ற நிலையிலிருந்து நாம் என்ற நிலைக்குப் பயணஞ் செய்ய வேண்டும். ஆனால் நீங்களோ நானிலிருந்து நானுக்குப் போகிறீர்கள். அதாவது நானிலிருந்து அகங்காரம் என்ற நிலைக்குப் போகிறீர்கள் இது தான் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் மூல காரணம்.

— பாபா

இனியாவது தீவிரசாயி அடியவர்கள் என்று காட்டிக் கொள்ள முயற்சிப்பவர்கள் மனம் மாறுவார்களா. இவை கூட்டாக அனுபவித்தமையால் ஆதாரங் காட்டக்கூடியவை. ஆனால் இவற்றை விட ஒவ்வொரு சாயி அடியாரிடமும் உள்ள அனுபவங்கள் ஏராளம் அவை தாராளம். எனவே இக்கட்டுரையை வாசிக்கும் நீங்களும் இவற்றை அனுபவித்து உங்கள் கோரிக்கைகள் நிறைவேற இன்றே வாருங்கள் வழிபடுங்கள்.

# புவியினர்க்கோர் புனிதர்

பாரதத் திருநாட்டின் ஒரு பகுதியான தென் இந்தியாவின் பெங்களூர்ப் பகுதிக்கு அழகு சேர்க்கும், பெருமை சேர்க்கும் கிராமங்களில் அன்று இனிமையான ஜல ஜல என ஓடும் சித்திராவதி நதிதீரத்தில் அமைந்த புட்டபர்த்தியும் ஒன்று. இங்கு பெத்தவெங்கப்பராஜு ஈஸ்வரம்மா தம்பதிகள் இல்லறத்தை நல்லறமாக நடாத்திவந்தார்கள். இவர்களுக்கு மூன்று குழந்தைகள், மூத்தமகன் ஸ்ரீசேஷமராஜு, இரண்டாவது மகள் வெங்கம்மா; மூன்றாவது மகள் பர்வதம்மா.

ஒரு ஆணும் இருபெண்களும் இருந்தமையால் இக்குடும்பத்தினர் இன்னோர் மகனுக்காக ஏங்கினர். ஆனால் இவர்களைச் சோதிப்பதற்கோ, என்னவோ அடுத் தடுத்து மூன்று குறைப் பிரசவங்கள்; ஈஸ்வரம்மாவிற்கு ஏற்பட்டன. துன்பம்வந்தாலே நாம் எல்லோரும் கடவுளை நினைப்போம். இதற்கமைய இவர், மாமியார் லட்சுமம்மாவின் தூண்டுதலால் சத்யநாராயண பூசை செய்து மிகுந்த பக்தி சிரத்தையுடன் வழிபாடு செய்தார். இப்படியாக பக்திசிரத்தையுடன் வழிபட்ட பயன் வீண்போகவில்லை ஈஸ்வரம்மா கர்ப்பவதியானார், இந்தவேளை ஒருமுறை இவர் கிணற்றில் நீர் அள்ளும் பொழுது ஒரு நீல நிற ஒளிப்பந்து தம்மை நோக்கி வந்து அவருள் மெல்லப் புகுவதை அவதானித்தார். அவ்வளவுதான் அவர் மயங்கிவிட்டார். மாமியாரும் உறவினர்களும் பயந்தடித்து ஈஸ்வரம்மாவைத் தூக்கி நல்லபடி கவனித்து வந்தார்கள். இவர்களுக்கு ஒரேபயம்; " இம்முறையும் கடந்தகாலங்களைப் போலாகி விடுமோ " என்று. ஆனால் அதற்கு மாறாக இப்போ இக்குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் பல நல்ல சகுனங்கள் தோன்றலாயின. ஒரு இரவு இவர்களது அறையில் உள்ள வாத்தியங்கள் தாமே இசைக்க, ஒருதேவகீதம் மெல்லத்தவழ்ந்தது.

அன்று 22 - 11 - 1926 இரவு மாமியார் லட்சுமம்மா சத்யநாராயணர் பூசையினை முடித்துக்கொண்டுநான்குமணிக்குத்திரும்புகிறார். மருமகள் ஈஸ்வரம்மா பிரசவவேதனைக் குள்ளாகியிருக்கிறார். என்னே அற்புதம்! பிரசாதங்களை மருமகள் கையிற் கொடுக்க 23 - 11 - 1926 அதிகாலை 5. 06 மணிக்கு ஆருத்திரா நட்சதிரத்தில் இம்மண்ணுலகில் மானுடம் வாழ்வதற்கான வழிவகைகளைக் காட்டி நிற்கும் ஓர் அபூர்வ பிறவி பூமியை எட்டிப் பார்த்தது.

பார்த்தார்கள் ஆண்குழந்தை, அன்புக்குழந்தை அனைவரும் ஆனந்தித்தார்கள். சத்திய நாராயணப் பிரசாதத்திற்காக காத்திருந்த குழந்தையல்லவா? சத்திய நாராயணா என்றே திருநாமமிட்டனர். அதுமட்டுமா குழந்தையின் படுக்கைக்குக் கீழே ஒரு நாகபாம்பும் தென்பட்டது, பாம்பணையிற் பள்ளிகொண்ட பரந்தமான் பாரினை ஆளவல்லவா? வந்திருக்கிறான். இதனை யாரும் அன்று உணரவில்லை. இது ஒரு அதிசயம் என ஆரவாரித்தார்கள். அன்புக்குழந்தை அயலவர்களின் அரவணைப்புடன் அழகாகவளர்கிறது. ஆனால் இவர்களில் அடுத்தவீட்டு கணக்காளரின் மனைவியான சுப்பம்மாவிடம் சத்தியாவிற்கு நிரம்பிய பாசம் பெரும்பாலான பொழுதை அவர்களுடனேயே கழிப்பான் காரணம் அவர்கள் பிராமணர்கள் சைவ ஆசாரசீலர்கள். மாமிசம் சத்யா தொட்டதே இல்லை சிலவேளைகளில் சத்தியா வீட்டில் மாமிசத்திற்காக பிடித்துவைத்திருக்கும் கோழிகளை அவிழ்த்து விரட்டியே விடுவானாம். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள் அதற்கிணங்க சத்தியா ஆத்மீக சிந்தனையுடன் மட்டும் நில்லாது செயலிலும் காட்டி வருகிறான் மிகவும் இரக்க சுபாவமுள்ளவனாகவும், வறியவர்களுக்கு தன்னாலான உதவிகளைப் புரிபவனாகவும் வளர்வதைக்கண்ட ஊர்மக்கள் சத்தியாவிடம் வீசேட மதிப்பும் வைத்து வரலாயினர்.

## அற்புதக் குழந்தை :

திண்ணைப்பள்ளியில் படிக்கும் பொழுது தன் நண்பர்களை எல்லாம் கூட்டிவைத்து தானே இயற்றிய பஜனைப்பாடல்களை தமது இனிய குரல் வளத்தோடு பாடி எல்லோரையும் பரவசத்தில் ஆழ்த்துவான் இதனால் குழந்தைகள் எல்லோரும் சத்தியாவைதங்கள் குருவாக ஏற்று மதித்து நடக்கலாயினர். சத்தியாவிற்கு இப்போவயது எட்டு திண்ணைப்பள்ளிப் படிப்பு முடிந்துவிட்டது. புட்டபர்த்தியிலிருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள புக்கபட்டணத்தில் உள்ள உயர்தரப்பள்ளியில் சேர்கிறார். கரடுமுரடான சாலை, கடுங்குளிர், பனி, மழை இவற்றின் மத்தியிலும் சத்தியா நேரந்தவறாது பாடசாலைக்குச் சென்றுவிடுவார். தமது புத்தகப்பையிலிருந்து தமது நண்பர்களுக்கு அற்புதமான பொருட்களையும் எடுத்துக் கொடுத்து அற்புதம் நிகழ்த்தி வந்தார். இவரது அற்புதத்திற்கு மெருகூட்ட அன்று;

இவரது ஆசிரியர் கொண்டப்பா வகுப்பில் பாடம் நடத்துகிறார். சத்தியா இவர்குறிப்புக் கொடுத்து நிறுத்திய பின்பும் எழுதிக் கொண்டிருக்கிறார். அடே! சத்தியா என்ன செய்கிறாய்? நான் சென்னதை இன்னுமா எழுதவில்லை. சத்தியா,... ''இல்லை

ஐயா நீங்கள் சொன்னதை எழுதியபின்பு அஷ்டோத்திரம் எழுதுகிறேன் ஐயா'' என்று பணிவாகக் கூறுகிறார். அப்படியா... ம் எழுந்து வாங்கின்மேல் ஏறிநில் என்று சற்றுக் கடினமாகக்கூறி சத்தியாவிற்குத் தண்டனை கொடுக்கிறார். சத்தியா ஏறிநிற்கிறார். இது ஏனைய மாணவர்களுக்கு மனத்தாங்கலாக இருக்கிறது. பாடம்முடிந்து அடுத்தபாட ஆசிரியர் வர, கொண்டப்பா எழும்புகிறார்...... எழும்புகிறார் ... எழும்பவே முடியவில்லை. கதிரையில் ஒட்டிவிடுகிறார். நிலைமையை உணர்ந்த ஆசிரியர், தன் தவறை உணர்ந்த ஆசிரியர், சத்தியாவின் தெய்வீகத்தை உணர்ந்த ஆசிரியர், சத்யாவை வாங்கிலிருந்து இறங்கச் செய்த பின்பே அவரால் கதிரையிலிருந்து விடுபட முடிந்தது. இதனால் வரவர சத்தியாவின் தெய்வீகத் தன்மை, அற்புதங்கள் பெருகி பரவுகின்றன. சுவாமி பின் ஒரு சமயம் சொல்கிறார், '' நான் என் குருநாதரைத் தண்டிப்பதற்காக அதனைச் செய்யவில்லை சாதாரண மாணவர்களிடமிருந்து, வேறுபட்டவன் என்பதை மக்களுக்கு, மாணவர்க்கு புரியவைக்கவே இதனைச் செய்யவேண்டி ஏற்பட்டது '' என்று.

சத்யா இப்படியாக அற்புதங்கள் செய்வதும் பஜனைபாடுவதும் பலரையும் கவர்ந்தது. இந்தவேளை சொந்தத்தாய் ஈஸ்வரம்மா விடம் வளர்ந்ததிலும் பார்க்க கண்ணன் வளர்ப்புஅன்னையான யசோதையிடம் வளர்ந்ததுபோல சத்யாதனது பெரும் பாலான பொழுதை பிராமண அன்னை சுப்பம்மாவுடனேயே கழித்தார் அப்போ நாடககாலம். சத்தியாவின் தந்தை நாடகங்களிலும் நடித்து வந்தார். இதனால் சத்தியாவிற்கு வாய்ப்பு ஏற்பட பாணாசுரன், திரௌபதிமான சம்ரட்சணம், கிருஷ்ணலீலா, கனகதாரா, கம்சவதம் ஆகிய நாடகங்களில் பாத்திரமேற்று வெகுகச்சிதமாக அவ்வப்பாத்திரங்களாக மாறியே நடித்தார் எந்நேரமும் விபூதி நெற்றியில் பட்டையாக அணிந்தும் பெரிய குங்குமப்பொட்டுடனும் காணப்பட்டார். அதுமட்டுமல்ல அவர் சாரண இயக்கத்திலும் சேர்ந்து தன் சொந்த முயற்சியால் கோட்டைசுப்பண்ணா கடைக்கு விளம்பரப் பாட்டெழுதி பணம் சம்பாதித்து தன்தேவைகளைத் தானே பூர்த்தி செய்துவந்தார். புக்கபட்டணத்திலேயிருந்து உரவகொண்டா ஊருக்கு படிப்பின் நிமித்தம் மாறவேண்டிய நிர்ப்பந்தம். அங்கேயும் அவருக்கு நல்ல வரவேற்பு.

## தேள் கடியும் தேவாம்சம் பெருகியதும் :

1940 மார்ச் 8 ஆம் தேதி சத்தியா திடீரென வீரிட்டுக்கத்தினான். அண்ணன் சேஷமராஜு ஓடோடிவந்தார். தேள்கடித்து விட்டது தேடினார்கள் காணோம். தேள்க்கடிகுணமாக தேவ

லீலைகள் தொடர்கின்றன. வெறும் சுவரில் புராணக்காட்சிகள் படமாக ஓடின ஷிர்டிசாயிபாபாவின் படம் வெறுங்கை அசை வில் வந்தது, ஷிர்டிசாயிக்கு போர்த்த காவித்துணி காட்சியா யிற்று. இவைகள் அனைத்தும் சத்யாவை தேவதையாக்கின. அத் தோடு இரண்டாம் முறையாக சத்யா மயக்கம் போட்டு விழுந் தார். ஊரே கலங்கியது. சத்யாவிற்குப் பேய்பிடித்து விட்டது என்றார்கள் புட்டபர்த்திக்கு தாய் தந்தையருடன் வந்தார்.

வைத்தியங்கள் பல செய்தும் பலனில்லை தன்னுட் தானே கதைப்பதும் நிற்கவில்லை இறுதியாக ஓர் மந்திரவாதி அழைக் கப்பட்டான். மண்ணினைக்காக்க வந்த மாதவன் மண்டையில் நாலு தொளைகள் ஆணியால் போடப்பட்டன. குருதிபீறிட்டது. கூடநின்றவர்கள் துடித்தார்கள் ஐயன் அசையவில்லை பொறுமை யுடன் இருந்தார். சித்திரவதை தொடர்ந்தது. எல்லாவற்றையும் தாங்கி மீண்டார். உடல்வாடி உருக்குலைந்து காணப்பட்டார்.

**சத்ய சாயிபாபா :**

1940 மே 23ஆந் திகதி சத்யாவில் புதிய உத்வேகம் நான் சாயிபாபா என்றார். மக்கள் திரண்டார்கள் வியாழக்கிழமை தோறும் என்னை வணங்குங்கள், நானும்ஷிர்டிசாயியும் ஒன்றுமலர் களை அள்ளினார் கைகளால் வீசினார் ''சாயிபாபா'' என மலர்க் கொத்து எழுதி நின்றது. மக்கள்வியந்தனர். மகேசனை உணர்ந் தனர். மீண்டும் உரவ கொண்டா அங்கு சீரடி சாயிபாபாவின் படங்கள், அவரது பொருட்கள் என்பவற்றை கையினால் சிருஷ்டிக் கிறார். கொடுக்கிறார். மக்கள் கூட்டம் வழிபடத்தொடங்குகிறது பஜனை பெருகுகிறது. ஒரு சமயம் விருபாட்சர் ஆலயத்தில் ஏக கலத்தில் மூலஸ்தானத்தில் லிங்கத்துடனும் வாசலிலும் தர்சனம் கொடுத்து மக்களைப்பரவசத்தில் ஆழ்த்தினார். 1940 ஒக்டோபர் 20 ஆம் திகதி திடீரென எல்லோரையும் துறந்து நான் சாயி எனக்குப்பேயுமில்லை பிசாசுமில்லை என்னை நம்புங்கள் நான் இனி உங்கள் வீடுபுகமாட்டேன் என்று கூறி,

''மானஸ பஜரே குரு சரணம்
துஸ்த்ர பவஸாகர சரணம்''

எனப்பாடி எல்லோரையும் தம்பாலீர்த்து சாயியுகத்திற்கு மானுடத்தை அழைத்தார் உலகிலுள்ள பெண்கள் எல்லோரும் தன் தாயாராகவும் ஆண்கள் எல்லோரும் தமது தந்தையாராக

வும் மதித்து மனித இனத்திற்கு சேவை செய்யப்புறப்பட்டார். அவரது திவ்ய முகத்தைச்சூழ்ந்து ஓர் அமானுஷ்ய ஒளிவெள்ளம் பெருகியது.

இப்போ சத்யாவிற்கு வயது பதினனான்கு தன் வளர்ப்புத்தாய் சுப்பம்மாவுடன் தங்கி வருபவர்களுடன் பஜனைபாடி எங்கும் தெய்வீகத்தன்மை ஓங்கும் வண்ணம் செய்துகொண்டிருந்தார். தாமே தமது தெய்வசக்தியினால் வருபவர்களிற்கு உணவளித்தார்.

**சாயியின் லீலைகள் :**

வழியில் பெண்ணாகமாறி பின் பாறையில் வீற்றிந்தார், ஷீரடிசாயியின் படங்களை வரவழைத்துக் கொடுத்தார். புளிய மரமொன்றின் கிளையிலிருந்து அவரவர்களிற்கு வேண்டிய கனி களைப்பெற்றுக் கொடுத்தார். பிரகாசமான ஒளிமூலம் அனை வரது கண்களையும் மயக்கினார். ஷரடிசாயியின் சமாதியை அருகில் அழைத்துக்காட்டினார். நோய்களை நீக்கினார். குணமாக் கினார், சிகிச்சை அளித்தார். தாமே சத்திரசிகிச்சைக் கருவி களைவரவழைத்து நோயாளிக்கு சத்திரசிகிச்சை செய்து குண மாக்கினார் கடலில் இறங்கி உடுப்பு நனையாது வெளியேறினார். எதற்காக இவற்றையெல்லாம் சுவாமி செய்தார் அவரே சொல் கிறார் கேளுங்கள். '' நான் சங்கு சக்கரம் தாங்கி நிஜவிஷ்ணு வாகவந்தாற் கூட இக்கால மனிதர்கள் நம்பமாட்டார்கள். வேட தாரி என்பார்கள். அதற்குப்பதிலாக அற்புதங்கள் செய்துதான் மக்களை இழுக்கிறேன் ''.

முதலில் அற்புதங்கள் செய்து மக்களைக் கவர்ந்தவர் இன்று இந்த வருடம் அகவை எழுபதை அகிலத்தாருடன் ஆனந்தமாகக் கொண்டாட இருக்கிறார். அதற்கான பணிகளும் ஆரம்பமாகி விட்டன. எழுபது கிராமங்களிற்கு குடிநீர் வசதி செய்தளிக்கிறார், உலகிலுள்ள 107 நாடுகளில் உள்ள தமது சாயி நிறுவனங்கள் மூலமாக மானிடர்களுக்கு மாபெரும் பணியாற்றும் மணியான திட்டங்கள் திட்டிச் செயற்படுத்துகிறார். ஆன்மீகம் கல்வி சேவை என்பன சாயி நிலையங்களின் உயிர் மூச்சு. ''மானிட சேவையே மாதவ சேவை'' என மதித்து நடாத்துகிறார்.

எனது வாழ்க்கையே நான் உங்களுக்குத் தரும் செய்தி என்று கூறிய சுவாமி, இன்று சாயி அடியார்களைப் பார்த்துக் கேட் கிறார். ''உங்கள் வாழ்க்கை மற்றவர்களிற்கு நீங்கள் நல்கும் செய்தியாக மிளிர நடவுங்கள்'' என்கிறார்.

எனவே இப்புனிதர் வாழுங்காலத்தில் வாழும் அனைவரும் புண்ணியவான்களே. அவரின் கூற்றுக் கிணங்க, ஒரே ஒரு இனம்— மனித இனம் ஒரே ஒரு சமயம் — அது பிரேமை (அன்பு) எனும் சமயம் ஒரே ஒரு மொழி — அது இதயமொழி, ஒரே ஒரு கடவுள்— அவர் எங்கும் நிறைந்தவர். என்ற நான்கு நெறிமுறைகளைப் பின்பற்றி எம் மத்தியில் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பன வரை எம்மால் முடிந்தளவு சேவை செய்து அச்சேவையினூடாக இறைவனைக் காண்போமாக. சுவாமி ஒரு போதும் என்னை வணங்குங்கள் என்று சொல்வதேயில்லை. உங்கள் உங்கள் தெய்வங்களை வணங்குங்கள். உலகில் அன்பை சேவையை வளருங்கள் என்பதே சாயியின் போதனை. நாம் அதனைச் செய்தால் அவர் எம்முடைன் கூடவே வருவார்.

ஜெய் சாயிராம்

## பாடல் I

### பெற்றோர்

ஆந்திர மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்தில்
புட்டபார்த்தி என்ற சிறு கிராமத்தில் — எங்கள்
சாயிநாதன் பெற்றோர்கள் வாழ்ந்தனரே
பெத்த வெங்கப்பா என்ற ஒரு திருமகனார்
ஈஸ்வரம்மா என்ற ஒரு சிவ மகளை — தமது
இனிய துணை யாக அன்று ஏற்றனரே
பாலுடனே நீரதனைக் கலந்ததுபோல் வாழ்க்கையிலே
பண்புடனும் அன்புடனும் வாழ்ந்தனரே — அதனால்
பாசமிகு மூன்று மக்கள் பெற்றனரே.

## பாடல் II

### தெய்வக்குழந்தை

கருகரென்ற வண்ண முடியுடனே
வண்ண முடியுடனே — அங்கே
கனிவான குழந்தை பிறந்தது வே
குழந்தையது முதுகின் பின்னாலேயே
முதுகின் பின்னாலேயே — அங்கே
கொடியதொரு நாகம் நெளிந்ததுவே
குழந்தையது தலைக்கு மேலேயொரு
ஒளிவட்டம் வீசக் கண்டனரே
கண்டனரே அம்மா கண்டனரே — அந்தக்
கனிவான காட்சியைத் தான் கண்டனரே.

## பாடல் III

### சத்யாவின் பண்புகள்

பள்ளிசெல்லும் சத்யாதான் பாடம் நன்றாய்த் தான் படிப்பான்
பகிடி சேட்டை செய்திடாமல் பக்குவமாய்த்தான் படிப்பான்
குழப்படி செய்ய மாட்டான் குறைகள் ஒன்றும் காணமாட்டான்
தோழர் படுந்துன்பங்களை துடைப்பதிலே நாட்டங் கொண்டான்
அற்புதங்கள் செய்திடுவார் ஆறுதல்கள் கூறிடுவான்
பொற்பதங்கள் பணிபவர்க்கு புனித நீறுந்தான் கொடுப்பார்.

## பாடல் IV

சோகம் (முகாரி)

### ஆசிரியர் கோபப்பட சத்யா

தவறேதும் செய்தேனில்லை தயவுடனே கேளுமையா
அவமேதும் நானறியேன் அன்புடனே கேளுமையா
சொன்னபணி அத்தனையும் சுறுசுறுப்பாய் முடித்து விட்டேன்
ஆனதனால் அஷ்டோத்ரம் ஆவலுடன் எழுதுகிறேன்.

## பாடல் V

### சாயிபாபா ஆனார்

தோழர்களே தோழர்களே ஓடி வாருங்கள்
தொல்லை நீக்கும் வழியதனைத் தெரிந்து கொள்ளுங்கள்
எல்லையில்லா ஆனந்தத்தை வேண்டி நில்லுங்கள்
இறைவன் புகழ் என்றும் பாடி இன்பம் கொள்ளுங்கள்
அன்பு என்ற ஒன்றை மட்டும் மனதில் வையுங்கள்
அகிலம் எல்லாம் உங்கள் வசம் ஆகும் பாருங்கள்
என்று கூறி மலர்களையே அங்கு வீசினார்
சாயி பாபா என்று அவை அணி திரண்டன.

## பாடல் VI

கீர்த்தனை

இராகம்: கர்நாடக தேவகாந்தாரம் தாளம்: ஆதி

### எடுப்பு

எப்படி எடுத்துரைப்பேன் — சாயி
நற்புகழை இந்த நானிலத்தார் கேட்க

### தொடுப்பு

சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை அகிம்சை என்ற
தத்துவப் பொருள் தன்னை தரணிக் குரைப்பதனை

### முடிப்பு

அல்லல் உறும் மாந்தர் அவலம் அறிந்து வந்து
தொல்லைகள் தீர்த்து வைத்து துயரம் துடைக்கும் வள்ளல்
சற்குருவான வரை சர்வ மதத்தவரை
இப்புவி மாந்தர் வாழ என்றும் உழைப்ப வரை.

## பாடல் VII

### *சாயிபெருமை (மங்களம்)*

*அன்பு வடிவினர் சாயி அனைத்தும் அறிபவர் சாயி*
*துன்பம் களைபவர் சாயி தூய்மை வடிவமே சாயி*
*வேத முரைப்பவர் சாயி வேதனை தீர்ப்பவர் சாயி*
*தம்மபதம் அவர்சாயி தர்மம் உரைப்பவர் சாயி*
*விவிலியப் பொருள் சாயி விடிவிளக்கானவர் சாயி*
*கீதாபோதகர் சாயி கீதப்பிரியருஞ் சாயி*
*குர்ஆன் உரைப்பவர் சாயி சர்வமதத்தவர் சாயி*
*அனைத்தும் தருபவர் சாயி அன்பையே அவரிடம்யாசி.*

* **பாடல்கள் இனிமையான மெட்டுக்களில் ஆக்கப்பட்டுள்ளன. மெட்டுக்களை அறிய விரும்புவோர் சமிதியுடன் தொடர்பு கொள்க.**

ஓம் சாயிராம்

# மானிட சேவையே மாதவன் சேவை!

திரு. V. R. இராஜ்குமார் ஆசிரியர்

கலியுகத்தின் ஆத்மீக குருவாம் ஸ்ரீ சத்தியசாயி பகவான் எம்மை எல்லாம் அழிவுப் பாதையில் இருந்து ஆத்மீக பாதைக்கு வழிநடத்திச் செல்கிறார் அவரின் போதனைகள், உபதேசங்கள் எல்லாம் எம்மை ஒரு முழுமை பெறச் செய்பவையாகவும், மானிடப் பிறப்பின் நோக்கத்தை விளங்கிக் கொள்ளக்கூடிய தாகவும் உள்ளது. சுவாமி தனது போதனைகளில் சேவைப் பணிபற்றியே அதிகம் பேசியுள்ளார். ஆத்மீக சாதனைகள் யாவிலும் சிறந்த சாதனையாக சேவைக்கு முக்கியத்துவம் அளித் துள்ளார்.

சுவாமி சேவைபற்றி சேவைப் பணியாளரின் குணங்கள், பண்புகள் பற்றி அவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றி எல்லாம் விரிவாகத் தனது போதனைகளில் உபதேசித்துள்ளார். ஒருவனுக்கு சிறந்த குரு வாய்க்கப் பெற அவனுக்குத் தெய்வத் திருவருள் கிட்ட வேண்டும். என சங்காரச்சாரியார் விவேக சூடாமணி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு எமக்கும் தெய்வத்திருவருளால் கிடைத்த ஆத்மீககுருவே ஸ்ரீ சத்தியசாயி, சுவாமிகள் ஆவர். அவர் கூறிய போதனைகளின்படி நாம் எமது வாழ்க்கையை வாழ வேண்டும். நிறைந்த சேவைகள் ஆற்ற வேண்டும். ஜெபம், தியானம், பஜன் இவற்றிலும் பார்க்க சிறந்த சாதனை, தன்னை மகிழ்விக்கக்கூடிய சாதனை சேவையே என பகவான் வற்புறுத்திக் கூறுகின்றார். அத்துடன் சேவையின் தேவை அறிந்து சேவை செய்ய வேண்டும். எங்கு எமது சேவை தேவைப்படுகிறதோ அங்கேயே எமது சேவை செய்யப்பட வேண்டும். பெயருக்காகவோ, புகழுக்காகவோ செய்யப்படுவது சேவை அல்ல. திக்கற்றவர்களுக்கும் ஏழை எளியவருக்கும், உதவி அதிகம் தேவையானவருக்குமே உங்கள் சேவை அவசியம் என்கிறார்.

பகவத் கீதையிலே கண்ணன் அருச்சுனனுக்குச் செய்யும் உப தேசத்தில் கன்மயோகம் என்ற தலைப்பில் கடமையைச் செய் பலனை எதிர்பாரதே எனக் கூறுகிறார். அதே போல எமது

சேவையும் பலனை எதிர்பாரத சேவையாக அமைய வேண்டும். தியாக உணர்வுடன் சேவை புரிய வேண்டும். சேவையாளன் ஒருவனிடம் அகங்காரம், ஆடம்பரம், அபிமானம் என்பன இருத்தல் கூடாது என பகவான் போதித்துள்ளார். ஆசையை படிப்படியாகக் குறைத்து தெய்வீகத்தை வளர்ப்பது ஆனந்தம் அளிக்கும். சேவைப் பணியில் ஈடுபடுங்கள் என சுவாமி கூறுகிறார்.

இந்த வகையில் உரும்பிராய் சத்திய சாயி சேவா நிறுவனம் தனது பத்து வருட காலத்தில் பல சேவைகளைச் செய்துள்ளது. இந் நிறுவனத்தின் முதலாவது சேவதாள் அமைப்பாளராக பணியாற்றும் வாய்ப்பு அடியேனுக்கு பகவானின் திருவருளால் கிட்டியது. அவ்வேளையில் இரத்ததானம், வீதிகள் திருத்துதல், உணவுப் பொதிகள் வறியோர் இல்லங்களுக்கு வழங்குதல், குடியேற்றத் திட்டங்களில் சுகாதார ஆலோசனைகள், அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்களுக்கு உணவு, உடை சேகரித்து வழங்கல் போன்றவற்றுடன் முதலுதவி வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வந்தன. இதே போல தொடர்ந்தும் தனது சேவை தேவையான இடங்களில் இவ் நிறுவனம் செய்து வருகிறது. நாமும் இணைந்து பகவான் சேவையில் பணி புரிவோமாக.

சாயிராம்

# "அன்போடு இசைந்த சேவையே சாயிதத்துவம்"

டாக்டர் க. சிதம்பரநாதன்

"பிறரை நேசித்து இறைவனை அடைவாயாக" (Love others and realise God) என்பது அவதார புருஷர் பாபாவின் அருள் வாக்காகும். எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பது ஒரே ஒரு தெய்வசக்தி என்பதை அறிவால் உணர்ந்து அந்த உயிர்களுக்கு அன்போடும் மகிழ்வோடும் சேவை செய்வதே சாயிதத்துவமாகும். இந்தச் சிறப்புமிக்க தத்துவம் உலகளாவியரீதியில் பரந்து விரிந்து செயல்பட வேண்டும் என்பதே சாயிசங்கற்பமும்; கருணை நிறைந்த செய்தியுமாகும். அன்போடு இசைந்த சேவை ஒன்றே ஆன்மீக வாழ்வின் உயர்வுக்கும் லௌகீக வாழ்வின் சிறப்பிற்கும் மனிதனை அழைத்துச் செல்லும் ராஜவீதியாகும். இந்த உண்மையையே வேதங்களும், அறநூல்களும் ஞானிகள் மகான்களின் வாழ்க்கை நெறிகளும் சதா காலமும் நமக்குவழி காட்டிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பெரும் தத்துவமே பகவான் நமக்கு நல்விருந்தாக அளிக்கும் கருணை மழையாகிய உபதேச மொழியாகும். எண்ணங்கள் சொற்களை விட அன்பின் செயலாக்கமே சக்தியும் வலிமையும் மிக்கது என்பது சுவாமியின் அறிவுறுத்தலாகும். "Sound of Action is Louder than Words and Thoughts"

தூய அன்பை அடிப்படையாகக் கொண்ட சேவையே இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிக்க வல்லது. தான் அறவழியில் பெற்ற பொருளையும் அறிவையும் அன்புச் சேவை மூலம் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் போது, அது அருளாகமாறி உயிருக்குற்ற துணையாக நிற்கிறது. கொடுப்பவனாக இரு. பறிப்பவனாக வாழாதே என்பதும் சாயிதத்துவமே உன்னுடைய பண்பாடுமிக்க சீரிய வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் உனது சமூதாயமே உயிர் மூச்சுப்போன்றது என்பதை நன்றி அறிவோடு உணர்ந்து அதன் உயர்வுக்காக முடிந்தவரை சேவை செய்வது உனது கட்டாய கடமையாகும், என்று பகவானின் குரல் எங்களை நோக்கி நல்ல செய்தியைக் கொண்டு வருகின்றது. கண நேரம் செய்யும் சிறிய சேவையானது மாதக்கணக்காகச் செய்யும் தியானம் பஜனைகளை விடப்பெரும் பயன்தரும்.

சமூக உயர்வுக்காக சேவைசெய்ய விளையும் ஒவ்வொரு தனிமனிதனும் முதலில் தனக்குத்தானே சேவை செய்ய வேண்டும் என்பது பாபாவின் அறிவுறுத்தலாகும். தியாக சிந்தை, சீலம் நிறைந்த ஒழுக்கநெறி, கர்மத்தில் தர்மம் பேணும் மனோ பக்குவம் சுயநலம் கலவாத அன்பை வளர்த்தல் போன்ற சீரிய பண்பாடுகளைத் தனது சொத்தாகப் பேணி வளர்த்தல் போன்ற வையே தனிமனிதன் தனக்குச் செய்யும் சேவையாகும். அத்த கைய சேவையாளனே மானிட சேவைக்காக எவ்விடத்தும், எந்த நேரத்திலும் தன்னை அர்ப்பணம் செய்யும் செயல் வீர னாக இருப்பான் சதாகாலமும் தன்னையும் தன் குடும்பதையுமே நினைத்துக் கொண்டிருப்பவனுடைய நெஞ்சம் கல்லாக மாறி விடுவதால், பிறர்துன்பம் அவன் கண்களுக்குப் புலப்படமாட் டாது என்கின்றார் பாபா. மானிட நேயத்தின் ஒளிப்பிளம்புகள் சேவையின் மூலமாக ஊடுருவி துன்பம் துயரம் என்ற இருளில் தவிக்கும் உயிர்களுக்கு அன்பு ஒளியைக் காட்டி அக்கொடுமையி லிருந்து மீட்டெடுக்க வேண்டும். ஆக்கம் நிறைந்த நினைவு ஆறுதல் தரும் சொல், அருள் நிறைந்த செயல்களே சேவை செய்பவனுக்கும் சேவையைப் பெறுவோனுக்கும் ஆனந்தத்தை அளிப்பதோடு நெஞ்சத்தையே பரிசுத்தமாக்கி விடுகின்றது. நெஞ் சம் தூய்மை அடையும் போது ஒவ்வொரு உயிர் அணுவும் தெய்வீக அருள் ஒளியால் நிரம்பி வளிகிறது. அத்தகைய நெஞ் சில் அல்லல் இல்லை. சித்தமயக்கம் எனும் இருளும் இல்லை.

நமக்கு ஆண்டவன் அளித்த கண்களும், காதும், காலும், கைகளும் மானிடநேயம் நிறைந்த சேவைக்கே என்பதை மறத் தலாகாது. நீர் நிறை விழிகளை சோகப் பெருமூச்சு விடும் இதயங்களை உங்கள் கண்கள் காணும் போதும், அல்லற்பட்டு ஆற்றாது அலறும் ஜீவன்களின் குரல் உங்கள் காதில் விழும் போதும், உங்கள் கால்கள் அந்த இடங்களை விரைந்து தேடிச் செல்லட்டும். உங்கள் அன்பு அன்புகரங்கள் கனிந்த இதயங்க ளோடு அவர்களுக்குத் தொண்டு செய்யட்டும். அப்படிச் செய்யும் போது என்வார்த்தைகள் ஒரு யானையின் வலிமையை உங்க ளுக்கு அளிக்கும், என்று உற்சாகம் தருகிறார் பாபா. சேவை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மகிழ வேண்டாம். சேவை செய்வதற்கு வேண்டிய திறமையையும், ஆற்றலையும் செல்வத் தையும் தந்த இறைவனை வாழ்த்தி வணங்கு என்பது சுவாமி யின் கட்டளை.

எந்தச் சேவையையும் செய்யத் தொடங்குமுன் உன் இதயத்தின் அறைகளை இறைவன் நாமங்களால் நிரப்பிக்கொள். அப்போ நீ மேற்கொண்ட சேவை முழுமையான வெற்றியையும்

சந்தோஷத்தையும் தரும். ராம ராவண யுத்தத்தின் போது, கடலைக் கடக்க அணை கட்டுவதற்கு வானரப்படை ராம நாமத்தை உரக்கச் சொல்லிக்கொண்டு பாரியகற்களைத் தலையில் சுமந்தபோது பாரத்தையே உணரவில்லையாம், சில வானரர்கள் ராம நாமத்தைக் கல்லில் எழுதிக் கடலில் எறிந்த போது அவை தண்ணீரில் மிதந்து சென்றனவாம். தெய்வசிந்தனை சேவையின் கடினத்தை எளிதாக்கி விடும் என்று பாபா எங்களைச் சிந்திக்க வைக்கிறார். நிரந்தரமாகப் பாயும் ஆற்றுநீர் பிறருக்கே பயன்படுகிறது. பூத்துக் காய்த்துச் சொரியும் பழங்களை அனுபவிப்பவர்கள் பிறரேயன்றி மரமல்ல. பசு தன்பாலை கன்றுக்கும் பிறருக்குமே அர்ப்பணம் செய்கிறது. இயற்கையின் இந்தப் புனித சேவையைப் பார்த்து மனிதனும் பற்றற்ற பலன் கருதாச் சேவையை மானிட சமுதாயதற்கு அளிப்பதே பிறப்பின் பெரும் பயன். ஒவ்வொரு சாயி அடியானும் அன்போடு செய்யும் சேவை பகவானின் பாதங்களில் சேர்க்கப்படும் நறுமணம் மிக்க மலர்கள் என்பதை உணர்ந்து உய்வோமாக.

ஜெய் சாயிராம்

ஓம் சாயிராம்

## பாபா சொன்ன சின்னக்கதை

# தூய்மை நிரம்பிய உள்ளம் தெய்வம் உறையும் ஆலயம்

ஒரு புகழ் பெற்ற ஓவியர் ஒருவர் அரச சபைக்கு வந்தார். அரச சபையில் பளிங்குச் சுவர்களில் மகாபாரத யுத்தத்தில் நடந்த நிகழ்ச்சிகளை வரையும் படி அரசர் அந்த ஓவியனைக் கேட்டுக் கொண்டார். அப்பொழுது ஒரு மனிதன் தானும் ஒரு ஓவியன் என்றும் எதிர்புறச் சுவரில் சித்திரம் எழுத அனுமதி தரவேண்டும் என்றும் வேண்டி நின்றான். புகழ்பெற்ற ஓவியர் வரையும் அதே ஓவியங்களை அவர் எடுத்துக் கொள்ளும் கால வரையறைக்குள் தானும் வரைந்து காட்டுவதாக கூறினான். அந்தப் புதிய மனிதன். அனுமதி வழங்கப்பட்டது. கனத்த திரையைப் போட்டுக் கொண்டு இருவரும் ஓவியம் தீட்டத் தொடங்கினர்.

புகழ் பெற்ற ஓவியர் வரைந்து விட்டதாக அறிவித்தார். திரை நீக்கப்பட்டது. என்ன வியப்பு! எதிர் புறச் சுவரிலும் அதே காட்சிகள் வரையப்பட்டிருந்தன. திறமை மிக்க ஓவியர் படங்களை வரைந்து கொண்டிருந்த போது ஓவியத்தைப் பற்றியே அறியாத மனிதன் சுவரைத் தேய்த்துப் பளபளப்பாக்கினான். சுவர் கண்ணாடி போல் ஆகிவிட்டதால், எதிர்புறச் சுவரிலும் வரையப்பட்டிருந்த ஓவியம் இதில் நிழல் தோற்றமாக விழுந்து சுவரில் தீட்டப்பட்ட ஓவியம் போல் காட்சி தந்தது.

மனதின் அழுக்கை நீக்கித் தூய்மையாக்கினால் அதில் இறைவனின் திருஉருவம் கம்பீரமான தோற்றத்தோடு பிரதிபலிக்கும்.

ஜெய் சாயிராம்

# பொன்மொழிகள் 2

## நல்வாழ்வுக்கு

நல்லவர் கூட்டத்தில் எப்போதும் சேருங்கள். கெட்டவர்களை விலக்குங்கள். வீணாக வாதங்கள் புரிவதை ஒழியுங்கள் பேச்சைக் குறையுங்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுங்கள். திருமணம் செய்து இன்பம் பெறுவது நல்லதுதான். ஆனால் அந்த இன்பத்திற்கே அடிமையாகாதீர்கள். காமம் உடையவர்களுக்கு விடுதலை கிடையாது. மனதின் சம நோக்கை காமம் சிதைத்து விடுகிறது. ஆசைகள் உங்களை ஆளவிடாதீர்கள். அவைகளை குறிப்பிட்ட வரம்பினுள் அடக்கி ஆளுங்கள் அனாவசியமாகத் துக்கப்படாதீர்கள்.

**ஷீர்டி சாயி பாபா**

## நாமெல்லாம் கடவுளின் நிழல்கள்

எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருங்கள் உங்கள் உண்மைச் சொரூபம் வேறு. உங்கள் உடலிலிருந்து வேறுபட்டவர்கள் நீங்கள் உங்கள் உடல் இல்லை என்பதை உணருங்கள் இதுவே உங்களை நோய்களிலிருந்து காப்பாற்றும். உங்கள் நடவடிக்கைகளில் ஒருவித சுலபம் ஏற்படுத்தும்.

நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளின் நிழல்கள் அவரது உருவம்தான் நீங்கள். இப்படி நினைத்தால் உங்களுக்குத் துன்பம்தான் ஏது. கடவுள் எப்பொழுதும் சத்தியத்தின் அருகிலேயேதான் இருப்பார். அவரது நிழலாகிய திருப்பாதங்களை நம்பிக்கையுடன் பற்றிக் கொள்ளுங்கள் உங்களுக்குத் துன்பமே வராது.

**சத்ய சாயி பாபா**